உ

சிவமயம்.

ஸ்ரீவேம்பத்தூர்மடம்

என வழங்கும்

# ஆமர்த்தக மடத்தின் சரித்திரம்.

805-3-10

இஃது

நிகமஜ்ஞான சிவாசாரியர்

இயற்றியது.

---

திருநெல்வேலி

பிரம்மஸ்ரீ வேங்கடசுப்பாசாஸ்திரிகளால்

வடமொழியினின்று

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

---

சென்னை:

சிந்தாத்திரிப்பேட்டை

மயிலை - அழகப்பமுதலியாரவர்களது

சிவஞானபோத யந்த்ரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

கலி - ௫௦௧௨ - இ

சாதாரணஸ்ரீ ஆவணிமீ.

---

21 SEP 1910

-3- 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 SEP 1910
MADRAS.

உ

சிவமயம்.

# ஆமர்த்தக மடத்தின் சரித்திரம்.

---

வெண்பா.

சீரார் கயமுகனைச் செஞ்சொற் கலைமகளை
யோரார் குரவ ரெழுவரையு—நேர்துதிப்பாந்
தத்தகல வுஞ்செந் தமிழ்ச்சொ னடைபெறவும்
வித்தகஞா னம்பெறவு மே.

பஞ்சே ரடிமடந்தை பாகத்தன் றன்னையுமென்
செஞ்சொற் குரவனையுஞ் சிந்தித்தே—யெஞ்சலின்றிச்
சாற்றுவன் மாசோ சரப்பிரிவைச் செந்தமிழா
ஞற்றிசைவாழ் சீடர்க்கு நான்.

வேதாகமத்தின் விதிநெறிக டாமுணர்ந்த
நாதனிகம சிவஞானி—தீதகல
ஆமர்த் தகமடத்தி னற்புதத்தை யன்பருக்குக்
காமுற் றிசைத்தான் கனிந்து.

## நூல்.

பூர்வகாலத்தில் நாரதமஹாரிஷியானவர், ஸ்ரீகயிலாயத்திற்குச் சென்று பரமசிவனையும் அம்பிகையையுந் தரிசித்துத் திரும்பவும் பூலோகத்திற்கு வந்து மாஹாமேரு, ஹிமவத்கிரி விந்திய முதலிய பர்வதங்களையும், கேதாரம், பதரிகாசிரமம், ஸ்ரீகாசி முதலிய ஸ்தலங்களைத் தரிசித்தும், சோணை, கோதாவரி நர்மதை, காவிரி கிருஷ்ணை, விருதமுலை, தாம்பிரபர்ணி முதலியபுண்ணிய நதிகளில் தீர்த்தமாடியும், பூமண்டல முழுவதுஞ் சஞ்சரித்துக்கொண்டுவந்தார்.

அப்பொழுது ஒருநாள் நாரதமுனிவர் குமாரர்களுடன் வீற்றிருக்கையில் ஆனந்த மிக்குடையராய் அவர்களைநோக்கி, முனிவீர்காள். கேண்மின் நான் புண்ணியநதிகள், க்ஷேத்திரங்கள் முழுவதையுந்தரிசித்தேன். அவைகளுள் உத்தமோத்தமமாய் வேணுவன க்ஷேத்திரமென ஒன்றிருக்கிறது. அத்தலத்தில் திரிகால ஸ்நானம் சந்தியாவந்தனம், அக்னிஹோத்திரம் முதலிய நித்திய காரியங்களை விடா தியற்றுபவர்களாய் விரதங்களனைத்தையும் நியமமாய் அநுஷ்டிப்பவர்களாய்க் கருணையும் நிஷ்களங்கமுமான சித்தமுடையவர்களாய்ப் பிராமண குலோற்பவர்களான அநேகமஹாரிஷிகளிருக்கின்றார்கள். அவ்விருடிகள் யாவரும் கர்மம் ஒன்றிலேயே ஆசையுற்றுககர்மமே தர்மம். கர்மமே மோக்ஷம். கர்மமே பலசாத்தியம் கர்மஞ்செய்யாதவன் அப்பிரயோஜனனாகின்றான் எனக்கர்மத்தை வியந்தும், ஈசுரனில்லை ஈசுரனாலென்ன பிரயோஜனம் என்று

நாஸ்த்திக ஸித்தாந்தத்தைக் கொண்டுந் திரிகின்றார்கள். அவர்கள் பிராமணகுலோத்பவர்களாயும் முனிசிரேஷ்டர்களாயுமிருந்தும் முத்திநெறியறியாத மூர்க்கர்களாயிருக்கின்றனர். பரமசிவமே சகலலோகநாயகர் அவரன்றி யோரணுவுமசையாது என்பதை அவர்கள் கிஞ்சித்தும் அறியவில்லை. ஆதலின் அவர்கள் மதத்தைப் பரமசிவனிடத்தில் விண்ணப்பஞ் செய்யத் திரும்பவுங் கைலையங்கிரிக்குச் சென்று அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஹே! ஜகந்நாதா! கங்காதரா! தாருகாவன வாஸிகளாகிய ரிஷிகள் ஈசுர ஞானமென்பது ஒரு சிறிதுமில்லாமல் நாஸ்திகம்பூண்டு மதோன்மத்தர்களாய்க் கேவலம் கர்மிகளாயிருக்கின்றனர். அதனை யறிவிக்குமாறு உமது சந்நிதியடைந்தேன் எனச், சிவபெருமான் புன்னகைகொண்டு நீவேண்டியவாறு அநுக்கிரகிப்போம், இதனை மஹாவிஷ்ணுவினிடமும் அறிவி என, வைகுண்டத்துக்குச் சென்று அவ்வாஞ்ஞைப்படி விஷ்ணுமூர்த்தியிடமும் அறிவித்தேன்.

பரமசிவன் பரமானந்தராய்க் கங்காள ரூபத்துடன் நந்தி, பிருங்கி, மகாகாளர் முதலானவர்களாற் சூழப்பட்டு வேணுவனத்திற் பிரவேசித்துப் பிக்ஷையேற்பாராயினர் அங்குள்ள ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் இவர்களைக் கண்ணுறவே காமர்களாய் ஆடைசோரச் சித்தங்கலங்க அவ்விருவரையும் தனித்தனியே வளைந்துகொண்டு ரிஷிகள் மோகினிவடிவமாயிருக்கிற விஷ்ணுவையும், ரிஷிபத்தினிகள் மோகனசொரூபராயிருக்கிற பரமசிவனையும் பற்றி யிழுக்கத்தலைப் பட்டார்கள் இவ்வாறவர்கள் மன்மதபாணத்தினால் வருந்தி மயக்கமுறவே, அவர்களின் நித்திய காரியங்களாகிய ஸ்நானம், சந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், அத்தியயனம், பிதுர் காரியம் வைசுவதேயம் முதலியன தடைபட்டுப்போயின. இதுகண்ட பரமசிவன் மனம்பொறாமல் அவர்கள் மௌட்டியத்தை நினைத்து வியசனித்துத் துர்வாச மகரிஷியை யழைத்து நீர் பஹுரூப முகத்தில் * சிக்ஷை செய்யப்பெற்றவர், நம் அம்சம் நம்சுவரூபம் நம்மால் சம்ரக்ஷிக்கப்பட்டுமிருக்கிறீர். ஆதலின் நீர் இந்த வேணுவனத்தில் ஆயிரம் வருஷம் அகோரமுகஸ்தானத்திலிருந்து இங்கு அஞ்ஞானத்தில் மூழ்கிமயங்கித் திரியும் ரிஷிகளுக்குச் சிவதீக்ஷை, சிவபூசை, சிவஞான முதலியன உபதேசித்துச் சிவதர்மம் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கக் கடவீர் என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார்.

துர்வாஸ மஹரிஷியானவர் அவ்வாஞ்ஞைப்படி இருடிகளை அழைத்து அவர்கள் மதத்தைக் கண்டித்து ஈசுர ஞானோதயஞ் செய்வித்தனர். அன்று முதலாக அவ்விருடிகள் யாவரும் சுத்தசைவ சிகாமணிகளாய்விட்டனர்.

துர்வாச மஹரிஷியானவர் தமது வாசஸ்தானமாய் மடாலயமொன்று அமைக்குங் கருத்தினராய் ஸ்ரீவேணுவனேசுரருக்குத் தக்ஷிணபாரிசமாயும் தாம்ரபர்ணிக்குப் பச்சிம பாரிசமாயும்

023:6.2N
116713

மடாலயம் அமைத்து, அதில்வில்வ விருக்ஷத்தையும் சமஸ்த பாபஹரமாயிருக்கிற சாங்கார்த்தத்தையு முண்டுபண்ணி விபூதி ருத்திராக்ஷதாரணராய், ஜடாமகுடம் பூண்டவராய், யோகபட்டத்தை யணிந்தவராய் மௌனவிரதத்தை யுடையவராய்ச்சிவத்தியானத்திற் சிந்தைவைத்தவராய் எண்ணிறந்த முனிவர்களால் இறைஞ்சப்பட்டவராய் அம்முனீசுரர் வீற்றிருந்து, அதிபயங்கரமான தவம்புரிந்து அவ்விருடிகளுக்கு ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசம் சிவபூஜைமுதலியன செய்துகொடுப்பாராயினர்.

இங்ஙனம் நிகழும் நாளிலே துர்வாஸர் காசியபரை யழைத்து அவருக்குத் தீக்ஷை முதலியன செய்துகொடுத்துத்தமது ஸ்தானத்தில் ஸ்தாபித்தார். அவர் துர்வாஸ மகரிஷியின் தர்மத்தைக் கிரமமாய்ப் பரிபாலித்தனர்.

அப்பால் கொர்க்கமகரிஷிபுத்திரன் சங்கரிஷியும், அப்பால் உசனஸமகரிஷி புத்திரன் கௌதமமகரிஷியும், அப்பால் புலகமகரிஷியும்அப்பால் பூருவத்ஸலமகரிஷியும், அப்பால் புலஸ்தியமகரிஷியும் அப்பால் முக்கலமகரிஷியும், அப்பால் குருவிருந்தமகரிஷியும் அப்பால் கணேசமகரிஷியும், தத்தமக்கு முன்னோரால் தீக்ஷைசெய்யப்பெற்றுச் சிஷ்ய பரம்பரையை யாதரித்துச் சைவசமய ஸ்தாபனஞ் செய்துவந்தனர்.

இவ்வாறு நடந்துகொண்டிருக்கும்பொழுது கலியுகம்வரவே மேற்கூறிய கணேசுரமகரிஷி தபசின்பெ[illegible] மறைந்துவிட்டார்.

அச்சமயத்தில் அந்நாட்டை யரசுபுரிந்த குமாரதேவ மஹாமடம் ஆசாரியஹீநமாயிருப்பதுகண்டு மனவருத்தமுற்று, வேதம் நான்கையும் நன்குணர்ந்தவராய்த் தீக்ஷித குலோத்பவராய் அக்கினிகாரியங்களை முக்கியகாரிய[illegible] வகிப்பவராய் அறுபத்துநான்கு கலைகளையும் ஐயந்திரிபறஉணர்ந்தவராய்ச் சிவயோகியாராய்வாமதேவசிவன் எனத்திருப்பேர்பூண்டவராயுள்ள ஓர்பிராமணசிரேஷ்டரையழைத்து அவரைப்பூஜித்து ஆசாரியஸ்தானத்தில்ஸ்தாபித்தனர் அவர்சிஷ்ய பரம்பரையை யாதரித்துக் காலஞ்செல்லவே அவருக்குப்பின் அத்திரிகோத்திரத்திலுதித்த சத்தியோஜாத சிவனும், அவருக்குப்பின் இருதயசிவாசாரியரும், அவருக்குப்பின் சிகாசிவாசாரியரும், அவருக்குப்பின் ஈசானசிவனும், அவருக்குப்பின் பாரத்துவாஜ குலத்தில் உதித்த நேத்திரசிவனும், அவருக்குப்பின் கொர்க்ககோத்திரத்திலுதித்த சிவசுவாமி சிவனும், ஒருவர்பின்னொருவராய்த் தத்தமக்கு முன்னையோரால் தீக்ஷை மந்திரோபதேசங்கள் செய்யப்பெற்று ஆசாரிய பரம்பரையை வழுவற நடத்துவாராயினர்.

இவ்வாறு அம்மடத்திற் சில ஆசாரியர் நைஷ்டிகப் பிரமசாரி யாச்ரமத்திலும், சிலர் கிருகஸ்தாசிரமத்திலும் சிலர்சந்நியாசி ஆச்ரமத்திலும் இருந்து வந்தனர்.

மேற்கூறிய சிவசுவாமி சிவாசாரியார் சிலநாட்செல்லவே அகஸ்தியரைத் தரிசிக்கும்பொருட்டுப் பொதியாசலத்துக்கு எழுந்தருளினர். அங்குச் செல்லவே அவருக்குண்டாயிருந்த அதிதீவிர பக்குவத்தினாலே, பூலோக வாழ்வில்வெறுப்புற்றுத் தபசுசெய்ய விரும்பி மலைவாழ்வையே நிலைவாழ்வாகக்கொண்டனர். அதனால் மடமானது தாமரையில்லாத தடாகம்போல் இருக்க நேர்ந்தது.

அப்பொழுது மணப்படையூரை யரசுபுரிந்த வீரபாண்டியன் என்னும் அரசனானவன், மடம் ஆசாரியஹீநமாயிருப்பதுகண்டு மனக்கிலேசமுற்று, ஸ்ரீசாலிவாடீசுரரை நோக்கிப் பிரார்த்தித்தான். சாலிவாடீசுரர் பெருங்கருணைகூர்ந்து அரசனுக்குச் சொப்பனத்திலெழுந்தருளி "நீ மதுரைமாநகரத்துக்கு வரக்கடவாய் அங்கு ஆசாரியரைத்தருகின்றோம்" எனத்திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். வீரபாண்டிய மஹாராஜன் அதைக்கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, அவ்வாக்கைச்சிரமேற்கொண்டு இரதகஜதுரக பதாதிகள் சூழப்பெற்று விருதுகள் ஓங்க, வாத்தியங்கள் முழங்க மதுரைமாநகரத்துக்குச் சென்று, அங்குச்சோமசுந்தரேசுரரை மனம் வாக்குக் காயங்களினாலே முறையே சிந்தித்துத் துதித்துவணங்கித்தனது காரியத்தை விண்ணப்பஞ்செய்து, பாசுபதவிரதத்தை யநுஷ்டித்துக்கொண்டு சிலமாசங்கள் வசிப்பானாயினன். ஸ்ரீசுந்தரேசுரர் அதுகண்டு திருவருள் சுரந்து அரசனுக்குச் சொப்பனத்திலெழுந்தருளி "ஹே அரச! இந்நகரத்துக்குக் கீழ்த்திக்கிலே மூன்று யோசனைதூரத்தில் வேம்பத்தூர்என்னும் ஒருகிராமமிருக்கிறது. அதில் எனக்குப் பத்தனையும என்னால் தீக்ஷைசெய்யப்பெற்றவனையும் சாதுக்களால் பூஜிக்கத்தக்கவனையும் ஒருபிராம்மணகுலோத்தமன் இருக்கின்றான் அவன் கோத்திரம் நைத்திரவகாசியம், நாமதேயம் நீலகண்ட சிவாசாரியன், வேதம் நான்கையும் உணர்ந்தவன், பாசுபத விரதாநுஷ்டானம் பண்ணுகின்றவன் அவனையே நீ ஆசாரியனாகக்கொண்டு தாருகாவனத்தை நோக்கிச் செல்வாயாக." எனத்திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். அரசன் இவ்வமிர்த வாக்கியங்களைக்கேட்டுத் திடுக்குற்றெழுந்து மனக்களிப்புற்று, அவ்வாஞ்ஞைபின்படி வேம்பத்தூருக்குச் சென்று நீலகண்டசிவாசாரியரைக்கண்டு நமஸ்கரித்து, ஸ்ரீசுந்தரேஸ்வரர் திருவாய்மலர்ந்தருளிய வசனத்தையுந் தெரிவிக்க, அவ்வாசாரியர் சுந்தரேஸ்வரர் தனக்கும் அவ்வாறு சொப்பனத்தில் உத்தரவு கொடுத்தனரென, ஒருவருக்கொருவர் பரமானந்தமடைந்து நெஞ்சநெக்குருகக் கண்ணீர்வார உரோமஞ்சிலிர்ப்பப் பரமசிவத்தின் திருவருளை நினைந்து வியந்து எண்ணிறந்த ஸ்தோத்திரங்களால் துதிப்பாராயினர். ஆசாரியர் அரசனது மனோரதத்துக்கிணங்கி வருவதாய் வாக்களிக்க இருவரும் புறப்பட்டு மதுரைக்கு வந்தனர். அங்கு ஆசாரியர் விபூதியிலே ஸ்நானஞ்செய்து சரீர ஆத்தியந்தம் விபூதிஉத்தூளனஞ்செய்து, அஹோராத்திரம் மூன்றுநாள்நித்திரையில்லாமல் விபூதியிற்சயனித்து, கண்களிரண்டையும்.

மூடிக்கொண்டு சுந்தரேசுரரை நினைத்துத் தியானஞ் செய்துகொண்டு பாசுபதவிரதத்தையநுஷ்டித்தார். சோமசுந்தரர் நாலாம் நாள்பிராமணவடிவங்கொண்டு சிவாசாரியர்முன் எழுந்தருளிச் சோமசுந்தரலிங்கத்தையும் ஸ்ரீமீனாக்ஷியம்பிகைபிம்பத்தையும் சுவர்ணப்பெட்டியில்வைத்துக்கொடுத்து. "நீ வீரபாண்டிய சக்கிரவர்த்தியோடு தாருகாவனத்தை நோக்கிச்செல்லுக. நாமும் உனது சம்ரக்ஷணார்த்தம் அங்குவசிப்போம்" எனத்திருவாய்மலர்ந்தருள, ஆசாரியார் அளவற்ற ஆனந்தமடைந்து பக்திவிநயத்துடன் இருகரமேந்திப் பெற்றுக்கொண்டனர். அரசன் நீலகண்டசிவாசாரியரை ஸ்வர்ணப்பல்லக்கில் ஆரோகணிப்பித்துக்குடைகள்முதலிய விருதுகள்ஓங்கச்சாமரைவீசப் பதினெட்டுவிதவாத்தியங்கள்முழங்க அழைத்துவந்து, ஸ்ரீவேணுவனக்ஷேத்திரத்தை வலம் வருவித்து, ஸ்ரீசாலிவாடீசுரரையும் காந்திமதியம்பிகையையுந்தரிசனஞ்செய்வித்து, வில்வவிருக்ஷமும் சாங்காதீர்த்தமும் அமையப்பெற்ற துர்வாஸமஹாரிஷிமடாலயத்தில் ஆசாரியராக ஸ்தாபனஞ்செய்வித்தனன்.

நீலகண்டசிவாசாரியர் அரசனது மனோபீஷ்டப்படிஆசாரியராய்வீற்றிருந்து, சுந்தரேஸ்வரரால் கிடைக்கப்பெற்ற ஆத்மார்த்தஸ்வாமிக்கு நித்தியபூஜை செய்துகொண்டு நித்திய நைமித்தியங்களைவழுவற நடத்திச் சிஷ்யதர்மங்களையும் பரிபாலனஞ் செய்துவந்தனர்.

வீரபாண்டிய சக்ரவர்த்தி ஆசாரியர்பதினாறு வயதுடையவராக் கோடிமன்மதாகிருதியாப் பிரமசரியாச்ரமத்திலிருப்பது கண்டு, கலியுகதர்மத்தை நினைத்து ஆசாரியர் வேண்டற்பொருட்டுத்தான் வருந்தியதை ஆலோசித்து, ஆசாரிய சாங்கரியத்துக்குக் கேதுவாகாமலும் ஆசாரியபரம்பரை முட்டுதலின்றி வளர்தல் பொருட்டும் நகரவாஸிகளாகிய மந்திரிகள் வித்துவான்கள் தார்க்கிகர்கள் ஜோதிஷர்கள் முதலியோரை அழைப்பித்து, ஒருசபைகூட்டுவித்து ஆசாரியரின் ஆசிரமம் காலபேதத்தின் தன்மைக்கு ஏது உகந்ததென்று தீர்மானிக்கும்படி வேண்ட, அவர்கள் ஒருவர்க்கொருவர் நெடுநேரம் விவாதஞ்செய்து பௌத்திகாசாரியம் உத்தமமென நிச்சயித்தனர். அரசன்மனமகிழ்ந்து நீலகண்ட சிவாசாரியருக்கு அதனைத் தெரிவிக்க அவர் மனவருத்தத்தின்பேரில் அவ்வாச்ரமம்புக இசைந்தனர்,

உடனேவீரபாண்டிய சக்ரவர்த்தி கிம்பபுரகிராமத்தில் அவதரித்துச் சுலக்ஷணம் சுகோத்திரம் சுகுணங்கள் அமையப்பெற்ற சத்திரவதி என்னுங் கன்னிகாரத்தினத்தைத் தூதர்கள் மூலமாய் அழைப்பித்துச் சுபதினத்தில் சுபமுகூர்த்தத்தில் விவாகம்செய்து வைத்தனன்.

பின்னர் அரசன் அத்தம்பதிகளைச் சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து ஆசாரியரை நோக்கி, தேசிக சிரேஷ்டரே! மகாநுபவரே! சிவஸ்வரூபரே! கருணையங்கடலே! தேவரீர் ஜகத்காரணராகிய கதம்பவனேசுரரிடம் அகோரமுகத்தில்தீக்ஷைசெய்யப்பெற்றும் சொப்பனத்தில் மந்திரோபதேசஞ் செய்யப்பெற்றுமிருக்கிறீர். ஆதலின்

சாலிவாகனசாருக்கு அதிகாரமுகஸ்தானியமாயிருக்கிற இம்மடாலயத்தில் தேவரீர் ஆத்மார்த்த மூர்த்தமாகிய ஆலவாயண்ணலையும் அம்மையாரையும் * ஆமர்த்தகமடாலய-குருமூர்த்தமாகிய துர்வாஸ மஹரிஷியையும் நித்தியமாய்ப் பூஜித்து, சிஷ்யர்களாகிய அடியேங்களுக்கு தீக்ஷா மந்திரோபதேசங்களைச் செய்துகொடுத்து, சந்ததி பரம்பரையாய் நீடூழிகாலம் ஆண்டருளல் வேண்டுமென்று பிரார்த்திக்க, ஆசாரியர் கடாக்ஷித்து மஹதைஸ்வரிய விபூதிகொடுத்து, அரசனை அவன் பட்டணத்துக்கனுப்பிவிட்டு மடாலயகைங்கரியங்களை நடத்திவந்தனர்.

இம்மகிமையானது வேதக்கியான சிவாசாரியாரால் இயற்றப்பட்ட ஆத்மார்த்த பூஜா பத்ததியில் அஷ்டாதச மடாதிஷ்டித சிவாசாரிய சந்ததி பரம்பரையைக்கூறிய அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மகிமையைப்படிப்பவர், படிக்கும்படி செய்பவர், கேட்பவர், கேட்பிக்கும்படி செய்பவர் யாவரும் புத்திரமித்திரகளத்திராதிகளையும் க்ஷேத்திர தனதான்யசுகாதி சகல ஐசுவரியத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள்.

---

* ஆமர்த்தகமென்பது - பாபங்கள் கிஞ்சித்துமில்லாமல் போக்கடித்தல்.

ஸ்ரீதுர்வாஸர் திருவடிவாழ்க.

---

## இம்மடத்திலிருந்த சிவாசாரியருடைய திருநாமங்கள்.

---

௧. துர்வாஸர்
௨. காசியபர்.
௩. கெர்க்கமஹரிஷி புத்திரர் சங்கர்
௪. உசநஸ மஹரிஷி புத்திரர் கௌதமர்.
௫. „ „ புலகர்.
௬. „ „ பூருவத்ஸலர்.
௭. „ „ புலஸ்தியர்.
௮. „ „ முக்கலர்.
௯. „ „ குருவிந்தர்.
௧௦. „ „ கணேசுரர்.
௧௧. கலியுகம் வரவே வாமதேவர்.
௧௨. அத்திரிகோத்திரத்திலுதித்த சத்யோஜாதர்.
௧௩. கண்ணுவர் கோத்திரத்திலுதித்த இருதயசிவர்.
௧௪. சிகாசிவர்.
௧௫. ஈசானசிவர்.
௧௬. பாரத்துவாஜகுலத்திலுதித்த நேத்திரசிவர்.
௧௭. கெர்க்ககோத்திரத்திலுதித்த சிவஸ்வாமிசிவர்.
௧௮. வேம்பத்தூர்நீலகண்டசிவர்.

---